மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை
கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு,
பருத்தி புடைவைக் கடல்
சீமாட்டி
ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு
ATS
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கல்யாண முகூர்த்தப்
புடைவைகளின்
கைராசியான ஸ்தாபனம்
சீமாட்டி
ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 24 சனிக்கிழமை (08– 01 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 43

# பலாலியில் பயணி விமானம் புலிகளின் தாக்குதலில் சேதம்!

யாழ்ப்பாணம், ஜன. 8
பலாலி விமான நிலையத்தில் தரித்து நின்ற பயணிகள் விமானம் ஒன்று விடுதலைப் புலிகளின் தாக்குதலில் சிறிது சேதமுற்றது.

பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து இத்தகவல் தெரிய வந்ததாக கொழும்புடன் தொடர்புடைய தொண்டர் நிறுவன வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

சில தினங்களுக்கு முன்னர் பலாலி தளத்தில் தரித்து நின்ற — 50 பேர் பயணம் செய்யக்கூடிய — படையினரின் போக்குவரத்து விமானம் ஒன்றே ஷெல் சிதறல்களினால் சிறிது சேதமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

பலாலியில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே நேற்று முன்தினம் துப்பாக்கிச் சண்டை இடம் பெற்றதாகவும் —

பலாலி இராணுவப் பாதுகாப்பு அரண் மீது விடுதலைப் புலிகள் மோட்டார் குண்டுகளைக் கொண்டு தாக்கினர் என்றும் —

இராணுவத்தினரும் பதில் தாக்குதல் நடத்தினர் என்றும் —

இராணுவ அதிகாரி ஒருவர் லங்காபுவத்துக்குத் தெரிவித்ததாக இலங்கை வானொலி அறிவித்தது. [உ-எ-3]

# பாடசாலை மீது ஹெலித் தாக்கு! அச்சுவேலியில் மாணவி காயம்!!

அச்சுவேலி மகாவித்தியாலயத்தின் மீது நேற்று நடத்தப்பட்ட ஹெலிக்கொப்டர் தாக்குதலில் மார்க்கண்டு ரபீனாராணி (16 வயது) என்ற 10 ஆம் ஆண்டு மாணவி காயம் அடைந்தார். மற்றும் சில மாணவர்கள் சிறு காயங்களுக்கு உள்ளானார்கள்.

வித்தியாசாலையின் தளபாடங்கள், கட்டடங்கள் சேதம் அடைந்தன.

காயம் அடைந்த மாணவி கால் சிதைந்த நிலையில் அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

பாடசாலை நேரம் நடத்தப்பட்ட இத் தாக்குதல் காரணமாக அச்சுவேலி பகுதியில் உள்ள பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம், அச்சுவேலி புனிததிரேசா வித்தியாலயம், சரஸ்வதிவித்தியாலயம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களும் பதற்றம் அடைந்து பாதுகாப்புத் தேடினர். (இ-17-135-11)

# குடாநாட்டின் பல பகுதிகளிலும் பரவலாக ஹெலித் தாக்குதல்

## நவிண்டிலில் ஒருவர் அதிர்ச்சியால் மரணம்

வல்வெட்டித்துறை, ஜன. 8
குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடத்தியது.

முதலில் சுன்னாகம், மல்லாகம் பகுதிகளிலும் ஏழாலை மயிலங்காடு பகுதிகளிலும் தாக்குதல் நடத்தப்பட்டது.

பின்பு ஆவரங்கால் அச்சுவேலிப் பகுதிகளிலும் வடமராட்சியிலும் பரவலாகத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

வடமராட்சியில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் பெரும்பாலும் பாடசாலைகளைக் குறிவைத்தே நடத்தப்பட்டன.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் ஆண்கள் பாடசாலை, வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி, சிவகுரு வித்தியாசாலை, தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள் ஹெலித் தாக்குதலினால் பெரிதும் பதற்றம் அடைந்தனர்.

தாக்குதலின் போது சில பாடசாலைகளின் கட்டடங்கள், கூரைகள் சேதம் அடைந்தன.

வடமராட்சியில் நடத்தப்பட்ட தாக்குதலின் போது நவிண்டிலில் ஒருவர் அதிர்ச்சியால் மரணம் அடைந்தார். விசுவலிங்கம் (வயது 60) என்பவரே மரணம் அடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆவரங்காலில் மினி பஸ் ஒன்றை நோக்கியும் தாக்குதல் நடத்தப்பட்டது.

எனினும் பயணிகள் எவரும் காயம் அடையவில்லை.
(இ–15-173–155)

# பல்கலை. மாணவர் அனுமதி: இனி நேரத்துடன் அறிவிப்பு

## அடுத்த ஆண்டு முதல் புதிய நடைமுறை

கொழும்பு, ஜன. 8
ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சையில் சித்தி அடையும் மாணவர்களின் பல்கலைக் கழக அனுமதி குறித்து அவர்களுக்கு நேர காலத்துடன் அறிவிக்கும் திட்டம் ஒன்று அடுத்த வருடம் முதல் செயற்படுத்தப்படும்.

உயர் கல்வி ராஜாங்க அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கா மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

பல்கலைக் கழக அனுமதி குறித்த அறிவிப்பு வெளியிடுவதற்கு தற்போது தாமதம் ஏற்படுவதால் ஒரு தடவை பரீட்சை எழுதிய மாணவர்கள் அடுத்த பரீட்சைக்கும் தம்மைத் தயார் செய்யும் சிரமம் இருந்து வருவதாகவும் —

புதிய திட்டம் மூலம் இப்படியான சிரமத்தை தவிர்க்க முடியும் என்றும் — உயர்கல்வி வட்டாரங்கள் தெரிவித்தன.
(இ-6)

# பிரபாவின் படம் விற்றவர்கள் பிணையில்

சென்னை, ஜன. 8
விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனின் படத்தை விற்பனை செய்ததற்காகக் கைது செய்யப்பட்ட இருவரையும் பிணையில் விடுதலை செய்ய சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த மாதம் காஞ்சிபுரத்தில் வை. கோபாலசாமி கலந்து கொண்ட பொதுகூட்டம் ஒன்றில் வைத்து திரு. பிரபாகரனின் படங்களை விற்பனை செய்தமைக்காக இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.
[உ-3]

## சக்கோட்டைக் கடலில் பலியான

# 9 மீனவரில் மற்றும் இருவரின் சடலங்கள் கரை ஒதுங்கின

## இதுவரை 6 சடலங்கள் மீட்பு

வல்வெட்டித்துறை, ஜன. 8
வடமராட்சி சக்கோட்டைக் கடற் பகுதியில் கடந்த செவ்வாயன்று கடற்படையினர் நடத்திய வெறியாட்டத்தில் கொல்லப்பட்டதாகக் கருதப்பட்ட ஒன்பது மீனவர்களில் மற்றும் இருவரின் சடலங்கள் நேற்று முற்பகல் கரை ஒதுங்கின.

படையினரின் தாக்குதலில் பலத்த காயங்களுக்கு இலக்காகி, சிதைவுற்ற நிலையில் மயிலியதனை, வளரிக்காட்டுப் பகுதிகளில் இச்சடலங்கள் கரை ஒதுங்கின.

சடலங்களின் பல பகுதிகளிலும் வேட்டுக் காயங்கள் காணப்பட்டன.

இந்த இரு சடலங்களுடன் சேர்த்து இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த ஆறு பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன; அல்லது கரை ஒதுங்கியுள்ளன.

இடம்பெயர்ந்த மீனவர் சங்கத் தலைவர் சின்னத்துரை வியாகராஜா (வயது 40 — ஐந்து பிள்ளைகளின் தந்தை), செ. எட்வேர்ட் ராஜநாயகம் (வயது 31— மூன்று பிள்ளைகளின் தந்தை) ஆகியோரின் சடலங்களே நேற்று கரை ஒதுங்கின.

உறவினர்கள் சடலங்களை அடையாளம் காட்டி, இறுதிக் கிரியைகளுக்காக எடுத்துச் சென்றனர்.
(உ-155-173)

# இன்றும் நாளையும் படகுச்சேவை!

யாழ்ப்பாணம், ஜன. 8
கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்றும், நாளையும் வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப்புலிகள் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.
(இ)

# சாவகச்சேரியில் கடைகள் மூடப்பட்டன

சாவகச்சேரி, ஜன. 8
சாவகச்சேரிப் பகுதியில் நேற்றுக் கடைகள் யாவும் மூடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன. நகரில் உள்ள பாடசாலைகளும் மூடப்பட்டிருந்தன.

கடந்த மாதம் 30 [illegible] சாவகச்சேரி நகரப் பகுதியில்

(4ஆம் பக்கம் பார்க்க)

# எலும்புக்கூடுகள் விவகாரம்: அரசுக்கு தெற்கில் நெருக்கடி!

மூர்ச்சந்தி முரளி



புதைகுழி விவகாரம் ஆட்சிக்குப் புதைகுழி வெட்டிவிடும் போல......!

# புதைகுழிப் பிரதேசத்துக்கு பொதுமக்கள் செல்லத் தடை

கொழும்பு, ஜன. 8
இரத்தினபுரிக் காட்டில் — சூரியகந்த மலைக்குன்றுப் பிரதேசத்தில் — புதைகுழிகளில் இருந்து எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டு வரும் சம்பவத்தால் தென்னிலங்கையில் ஐ.தே.க. அரசுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், புதைகுழி அமைந்துள்ள பிரதேசத்துக்கு பொதுமக்கள் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டிருப்பதாக பொலீஸார் அறிவித்திருக்கின்றனர்.

1994 ஆம் வருடத்தை தேர்தல் ஆண்டாகக் கருதி அதற்கான முன்னேற்பாடுகளில் ஐ. தே. க. அரசு ஈடுபட்டிருக்கும் வேளையில் —

எலும்புக்கூடுகள் தோண்டி எடுக்கப்பட்டு வருவது பற்றிய செய்திகள் வெளியாகியிருக்கிறது. இது ஐ.தே.க அரசுக்கு தென்னிலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

தென்னிலங்கையில் அரசுக்கு எதிரான தீவிர பிரசாரத்துக்கு இச்செய்தி வழி கோலியுள்ளது. ஐ.தே.க. அரசின் செல்வாக்கை விழுத்த இந்த விடயத்தை தன்கு பயன்படுத்துவதற்கு எதிர்க் கட்சிகள் தயாராகி வருகின்றன.

எலும்புக்கூடுகள் மீட்கப்படுவது பற்றிய தகவல்கள் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளையும் சீற்றம் கொள்ள வைத்துள்ளன.

இந்த விடயத்தில் அரசு உரிய நடவடிக்கையை எடுக்காமல் தவறினால் அரசுக்கு எதிராக சர்வதேச அழுத்தங்களை கொண்டுவர அவை கங்கணம் கட்டிக் கொண்டு செயற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது—

இதனிடையே—

சூரியகந்த பற்றிய செய்திகள் வெளியே பரவாமல் தடுக்கும் ஒரு நடவடிக்கையாக

(4ஆம் பக்கம் பார்க்க)

# 'மாஹோ' கப்பல் வருவது திடீரென இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், ஜன. 8
திருகோணமலையில் இருந்து பருத்தித்துறை நோக்கி நேற்று முன்தினம் மாலை புறப்படத் தயாரான 'மாஹோ' கப்பல் திடீரென நிறுத்தப்பட்டது. அக்கப்பலில் ஏறிய 80 பயணிகளும் இறக்கப்பட்டனர்.

3 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் மா ஏற்றப்பட்ட இக்கப்பலில், கொழும்பில் இருந்து வந்த 80 பயணிகளும் ஏற்றப்பட்டு பருத்தித்துறை நோக்கி புறப்பட தயாரான வேளை —

அவசரமாக கிடைத்த தகவல் ஒன்றின் பேரில் அக்கப்பல் நிறுத்தப்பட்டதாகவும் —

அக்கப்பலில் ஏறிய பயணிகள் இறக்கப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலில் ஏற்றப்பட்ட மாவில் 600 மெற்றிக் தொன்னை கொழும்பில் இருந்து நேற்று திருகோணமலை வந்துசேர்ந்த 'கோமாரி' கப்பலில் ஏற்றுமாறு கிடைத்த தகவலை அடுத்தே இக்கப்பல் அங்கு நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

''கோமாரி'' கப்பலில் அந்த மா ஏற்றப்பட்ட பின்னர் 'மாஹோ' கப்பல் இன்று மாலை 80 பயணிகளுடன் பருத்தித்துறைக்கு புறப்படும் என்றும் —

நாளை காலை அது பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்றும் — எதிர்பார்க்கப்படுகிறது.

'கோமாரி' கப்பலில் ஏற்றப்படும் மா அவசரமாக கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படவிருப்பதாக முதலில் தெரிவிக்கப்பட்ட போதிலும் —

அது அங்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை நேற்று மாலைவரை உறுதி செய்ய முடியவில்லை. (உ-3-173)

# வாதுவ வருவது தாமதமாகும்

யாழ்ப்பாணம், ஜன. 8
தற்சமயம் கொழும்பில் பொருள்கள் ஏற்றும் பணியில் ஈடுபட்டுள்ள 'வாதுவ' கப்பல் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு பின்னரே பருத்தித்துறைக்கு வந்து சேரும் என நேற்று மாலை தகவல் கிடைத்ததாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரி தெரிவித்தார்.

கொழும்பில் தற்சமயம் பெய்யும் மழை—

படையினரின் சோதனை நடவடிக்கைகள்— ஆகியவற்றால் மந்தகதியிலேயே கப்பலில் பொருள்கள் ஏற்றப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பல் எதிர்வரும் 10 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வரும் என்று முன்னர் இங்கு தகவல் கிடைத்தது என்றும்—

அதன் பின்னர் 16 ஆம் திகதி வரும் எனத் தகவல் கிடைத்தது என்றும்—

தற்சமயம் 20 ஆம் திகதிக்கு பின்னரே அது வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# குமணவுக்குப் பதிலாக இனி சிறிய கப்பலே சேவையில்!

யாழ்ப்பாணம், ஜன. 8
வடக்கிற்கான 'குமண' கப்பல் சேவையை நிறுத்துவதென முடிவு செய்துள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதற்குப் பதிலாக சிறிய கப்பல் ஒன்றை சேவையில் ஈடுபடுத்த முடிவு செய்துள்ளது.

வடக்கிற்கு உணவு மற்றும் அத்தியாவசியப்பொருள்களை ஏற்றி வரவும் —

கொழும்பு செல்லும் அவசர நோயாளர்களை பருத்தித்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையே கூட்டிச் செல்லவும் —

கடந்த 3 வருடங்களாக குமணா கப்பலை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு [illegible] பயன்படுத்தி வந்தது.

குமணவில் ஒரு தடவையில் 3,500 மெற்றிக் தொன் பொருள்களை ஏற்றி வரலாம். அதேபோல் ஒரு தடவையில் அதில் 99 பயணிகள் பயணம் செய்யலாம்.

இக்கப்பலின் சேவையை தொடர்ந்து பெறுவதில்லை என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு முடிவு செய்துள்ளதாகவும் —

இக்கப்பலுக்குப் பதிலாக மேற்படி சேவைகளுக்காக சிறிய கப்பல் ஒன்றை வாடகைக்கு அமர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் —

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு யாழ். அலுவலக அதிகாரி உதயனுக்குத் தெரி

(4ஆம் பக்கம் பார்க்க)

## சூரியகந்தவுக்குச் சென்ற

# பத்திரிகையாளர்கள் சி. ஐ. டி. விசாரணையில்!

கொழும்பு, ஜன. 8
சூரியகந்த பகுதியில் புதை குழியிலிருந்து எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டது பற்றிய செய்தியைச் சேகரிப்பதற்காக அங்கு சென்றிருந்த பத்திரிகையாளர்களை இரகசியப் பொலீஸார் விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

நேற்று சிங்கள நாளிதழான 'திவயின' பத்திரிகையின் அலுவலகத்துக்குச் சென்ற இரகசியப் பொலீஸ் அதிகாரிகள் நால்வர் சம்பந்தப்பட்ட செய்தியைச் சேகரித்ததாகக் கூறப்படும் அலுவலகச் செய்தியாளர் தயாலங்காபுர, செய்திஆசிரியர் உபாலி தென்னக்கோன், பிரதம ஆசிரியர் எட்மண்ட் ரணசிங்க ஆகியோரையும் விசாரணைக்கு உட்படுத்தினர். அவர்களின் வாக்குமூலங்களையும் பொலீஸார் பதிவு செய்தனர்.

அரசை அபகீர்த்திக்கு உட்படுத்தும் நோக்குடன் இச்சம்பவம் பற்றிய செய்தி பிரசுரிக்கப்பட்டதா என தங்களிடம் வினாவப்பட்டதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

'த ஐலண்ட்' ஆங்கில நாளிதழ் பத்திரிகைக்கும் இரகசியப் பொலீஸார் நேற்று சென்றனர். ஆனால் சூரியகந்த பகுதிக்குச் சென்ற — சம்பந்தப்பட்ட — செய்தியாளர் அலுவலகத்துக்கு வரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டதால் மீண்டும் தாங்கள் திங்களன்று அலுவலகத்துக்கு வருவதாகத் தெரிவித்துவிட்டு சி.ஐ. டியினர் அங்கிருந்து சென்றனர். [உ-6]

# இயந்திரத்தால் புதைகுழி தோண்டுவதற்குத் தடை!

கொழும்பு, ஜன. 8
சூரியகந்தவில் எலும்புக் கூடுகள் மீட்கப்பட்ட புதைகுழியை இயந்திரங்கள் கொண்டு தோண்டுவதற்கு எம்பிலிப்பிட்டிய நீதிவான் பீ ரணசிங்க தடைவிதித்திருக்கிறார்.

புதைகுழிகள் சுமார் முப்பது அடி ஆழம் வரை இருக்கக் கூடும் என சட்டத்தரணிகள் எடுத்துக் கூறினர். எனினும் இயந்திரங்களைப் பயன்படுத்தாது ஆட்களைக் கொண்டே புதைகுழி தோண்டப்பட வேண்டும் என நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
(உ-6)

# வை. கோவை நீக்கியதற்கு தி.மு.கவில் பலத்த எதிர்ப்பு

## கருத்துக் கணிப்பில் தகவல்

சென்னை, ஜன 8
தி மு .கவை முதன்மையாக ஆதரிப்பவர்களில் 35 வீதத்தினரே கட்சியை விட்டு வை. கோபாலசாமியை நீக்கியது சரி எனத் தெரிவித்திருக்கிறார்கள். 47 வீதத்தினர் கோபாலசாமியை நீக்கியது தவறு எனக் கூறியுள்ளனர்,

சென்னை கிறிஸ்தவக் கல்லூரி மாணவர்கள் நடத்திய கருத்துக் கணிப்பு ஒன்றிலிருந்தே இத்தகவல் வெளியாகியிருக்கிறது.

தி மு கழகத்தினரில் 42 சதவீதத்தினர் கோபாலசாமியை ஆதரிப்பதாகவும் —

36 சதவீதமானவர்கள் கருணாநிதிக்கு அடுத்தவாரிசாக கோபாலசாமியை ஏற்பதாகவும் அக்கருத்துக் கணிப்பிலிருந்து தெரியவந்திருக்கிறது.

கருணாநிதியின் வாரிசாக கோபாலசாமியே வரவேண்டும் என்பதை 36 சதவீதமானவர்கள் ஆதரித்துள்ளனர்.

24 சதவீதப் பேர் அன்பழகன் வாரிசாக வரவேண்டும் என்று விருப்பம் தெரிவித்துள்ளனர். (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

192/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


## பாணுக்கு ''கியூ''வில்!

மாரி காலத்துடன் கப்பல் வரத் தாமதமாகியதால் குடாநாட்டில் கோதுமை மாவுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. கடைகளிலும், பாண் சாலைகளிலும் காலையும், மாலையும் ஒரே சனக்கூட்டமாக இருக்கிறது. சிறிமாவோ பதவிக் காலத்தில் பாணுக்கு ''கியூ''வில் நின்றது போல, இப்போதும் பாவனையாளர்கள் மணிக் கணக்கில் பாணுக்குத் தவம் கிடக்கின்றனர்!

கடந்த மாதம் கடும் மழை பெய்ததால் பல வீடுகளில் அடுப்பு எரிக்க முடியவில்லை. விறகுத் தட்டுப்பாடு ஒரு புறம். அதனால் நகரப் புறத்தில் மட்டுமன்றிக் கிராமப் புறங்களிலும் பல வீடுகளில் இரண்டு வேளையும் பாணே சாப்பாடாகியது இந்தக் காரணத்தாலும் பாணுக்கும், மாவுக்கும் தட்டுப்பாடு உண்டாயிற்று.

தமிழர்களாகிய நாம் அரசியல் சுதந்திரம் பெறுவதற்காக மிகப்பெரிய அளவிலான விடுதலைப் போராட்டம் ஒன்றை நடத்தி வருகின்றோம். அதன் பொருட்டுப் பல வழிகளாலும் கஷ்டங்களை அனுபவிக்கின்றோம். பல அரிய அர்ப்பணங்களைச் செய்கிறோம்.

விடுதலைப் போராட்டம் வெற்றி அடைந்து அரசியல் சுதந்திரம் கிடைக்கும் போது, அது நிறைவானதாகுவதற்கு பொருளாதார சுதந்திரமும் தேவை. விடுதலை கிடைத்த பின்னர் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பலாம் என்றிருக்காது, இப்போதே அதற்கான அடித்தளம் போடப் படவேண்டும்.

அது மட்டுமன்றி விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும், அதற்குப் பலம் சேர்ப்பதற்கும், வெல்வதற்கும் பொருளாதார பலம் அவசியமாகும்.

இதனை உணர்ந்து தமிழர் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கான ஆரம்ப வேலைகள், போர்க்கால சூழலை மனதிற் கொண்டு நடக்கின்றன. எனினும் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்ட போது மக்கள் பாணுக்காகக் கடைகளில் நின்றதைப் பார்த்த போது...

நாம் தங்கு பொருளாதார நிலையில் இருந்து சுயசார்பு பொருளாதார நிலையை எட்டுவதற்கு இன்னும் நீண்ட தூரம் செல்லவேண்டி இருக்கும் என்றே எண்ணத் தோன்றியது. போர் தொடங்கி மூன்றரை வருடங்களுமாகி விட்டன ஆயினும் தமிழர்கள் தங்கள் உணவு முறைகளை சிறிதேனும் மாற்றியதாகத் தெரியவில்லை.

எங்கள் மண்ணில் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களையே உணவாக மாற்றும் சுதேசிய உணர்வு ஒரு சத வீதத்தினருக்காவது அரும்பியதா என்பது சந்தேகமே.

★ தமிழ்ப் பகுதியின் சுவாத்தியத்துக்கு ஏற்ப வளரக் கூடிய, உற்பத்திசெய்யக்கூடிய உணவுப் பயிரினங்கள் இனங் காணப்பட வேண்டும்.

★ அவற்றை இயன்றவரை அதிக அளவில் உற்பத்தி செய்யவேண்டும்.

★ உள்ளூரில் உற்பத்தியாகும் பொருள்களை எமது நாளாந்த உணவுத் தேவைகளுக்குப் பயன்படுத்த வேண்டும். அதற்கேற்றவாறு மக்கள் தமது உணவுமுறைகளை மாற்றவேண்டும்.

மேற்சொன்ன மூன்று படிமுறைகளைச் செயலாக்குவதற்கு மக்களின் உணர்வுபூர்வமான பங்களிப்புத் தேவை. ஒவ்வொரு தமிழ் மகனும் இவற்றிலேயே தனதும், தனது சமூகத்தினதும் வாழ்வும், தாழ்வும் தங்கியுள்ளன என்பதனை உய்த்து உணர வேண்டும் தங்கள் வாழ்க்கை முறைகளை காலத்திற்கு ஏற்றவாறு மாற்றுவதற்கு மக்கள் பின்னடித்தால், அதன் விளைவுகளை அவர்களே அனுபவிக்க நேரிடும்.

எமது பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதிலும், முக்கியமாக உணவில் சுய தேவைப் பூர்த்தியை இலக்காகக் கொண்ட செயற்பாட்டிலும் நாம் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். இல்லையேல் தமது விடுதலைப் போராட்டத்தை அரசு மழுங்கடிப்பதற்கு தமிழர்களே வாய்ப்பளித்ததாகிவிடும்.

---

வெள்ளத்தால் சேதமடைந்துள்ள

# அந்தணத்திடல் பாலத்தை திருத்துவதற்கு நடவடிக்கை

## அரச அதிபர் பணிப்புரை

யாழ்ப்பாணம், ஜன. 8

வெள்ளத்தால் சேதமடைந்த அந்தணத்திடல் பாலத்தை உடனடியாகத் திருத்துவதற்கு யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

வடமராட்சியையும், தென்மராட்சியையும் இணைக்கும் அந்தணத்திடல் பாலம் வெள்ளத்தால் உடைந்துள்ளதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் தமது விளைபொருள்கள் அறுவடை செய்யவும், சந்தைப்படுத்தவும் முடியாத நிலையில் உள்ளனர்.

மக்களின் கஷ்டத்தைப் போக்குவதற்கு, உடனடியாக இந்தப் பாலத்தை திருத்தி அமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அரச அதிபர் அவசர பணிப்புரையை வழங்கி உள்ளார். (ஒ-3)

## மனநோயாளருக்கு அன்பளிப்புகள்

யாழ்ப்பாணம், ஜன. 8

மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பளை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறும் மனநோயாளருக்கு யாழ். லயன்ஸ் கழகமும், மானிப்பாய் லயன்ஸ் கழகமும் இணைந்து உடுபுடைவைகள், விளையாட்டு உபகரணங்கள் ஆகியவற்றை அன்பளிப்பு செய்யும் வைபவம் நாளை ஞாயிறு பிற்பகலில் நடைபெறும். (த-135)

## வாதுவவில் தபால் பொதிகள்

கொழும்பு, ஜன. 8

கொழும்பில் இருந்து புறப்படவுள்ள 'வாதுவ' கப்பலில் ஆயிரத்து 500 தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்படவுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் நாயகம் எம். எம். ராபீக் தெரிவித்தார். (உ-5)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்குவதற்கு உதவுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ். மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுமாறு யாழ். செயலக சமூகசேவைப் பகுதி, வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஊடாக இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளுக்கும் யாழ். செயலக அதிகாரிகளுக்கும் இடையே யாழ். செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. மாவட்டத்தில் உதவி அரச அதிபர் பிரிவுகள் தோறும் ஏற்பட்டுள்ள வெள்ளப் பாதிப்புகள் குறித்து அந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள், உதவி அரச அதிபர்களுடன் இணைந்து நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபடுவது என்றும் அந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. (ஒ-5)

## பதவி உயர்வுகள் குறித்து படையினரிடையே அதிருப்தி

இராணுவத்தின் சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட பிரிவில் உள்ளவர்களுக்கு பதவியுயர்வு வழங்கும்விடயத்தில் ஸ்ரீலங்கா அரசு கடைப்பிடிக்கும் கொள்கையினால் இராணுவத்தினர் மத்தியில் அதிருப்தி நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தப் பிரதேசத்தில் கடமையாற்றும் இராணுவத்தினருக்கே பதவியுயர்வு அளிக்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டது. ஆனால் தற்பொழுது அவரது சேவைக் காலமும் கருத்தில் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்தே இராணுவத்தினர் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாக கொழும்புப் பத்திரிகை செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

இதனை அடுத்து இராணுவ உயர்பீடம், இந்த முடிவை மாற்ற வேண்டுமென அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது என்றும்—

இவ்வாறான கொள்கை பின்பற்றப்படுமாயின் இந்த யுத்தம் முடிவுக்கு வர இன்னும் பல ஆண்டுகள் செல்லும் என்று தற்பொழுது யுத்தம் நடைபெறும் பகுதிகளில் கடமையாற்றும் இராணுவ அதிகாரிகள் பலர் தெரிவித்துள்ளதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## ஆந்திரா தலைநகர் ஹைதராபாத் திராட்சைத் தோட்டத்தில் ஜெயலலிதா ஓய்வு!

சென்னை, ஜன 8

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஓய்வு எடுப்பதற்காக ஆந்திர மாநிலத் தலைநகர் ஹைதராபாத்தில் உள்ள தனது திராட்சைத் தோட்டத்துக்குச் சென்றுள்ளார்.

பிரதமர் நரசிம்மராவ் ஆந்திரா மாநிலத்துக்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு அங்கு சென்றுள்ள வேளையில், முதல்வர் ஜெயலலிதாவும் அங்கு சென்றிருக்கிறார்.

அ. தி. மு. க. அரசு பதவி நீக்கப்படுவதைத் தடுக்க—காங்கிரஸுடன் உறவை மீண்டும் புதுப்பிக்க—முதல்வர் ஜெயலலிதா எடுக்கும் கடைசி முயற்சி இதுவென அரசியல் அவதானிகள் குறிப்பிடுவதாக பி. பி. ஸி. தெரிவித்தது. [ஒ-எ-5]

## மாநகரசபை சம்பளக் கொடுப்பனவு: முழு நிதியையும் வழங்க மாகாணசபை இணக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ். மாநகரசபை ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவை வழங்கத் தேவையான நிதியை முழுமையாக அனுப்புவதற்கு வடக்கு, கிழக்கு மாகாணசபை இணங்கியுள்ளது.

தற்போதுள்ள சூழ்நிலையில் சோலைவரி மற்றும் வருமானங்கள் போதிய அளவு கிடைக்காததால் ஊழியரின் சம்பளம் வழங்குவதில் பெரும் நெருக்கடியை சபை எதிர்நோக்குகிறது. இந்த நிலைமையை விளக்கியதையடுத்தே தேவையான நிதியை முழுமையாக வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் ஊழியர்களின் சம்பளத்துக்காக 60 வீதமான நிதியையே மாகாணசபை வழங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவின் ராணுவ பலம் குறைக்கப்படமாட்டாது!

### ஆந்திராவில் ராவ் அறிவிப்பு

ஹைதராபாத், ஜன. 8

இந்தியாவின் இராணுவபலம் குறைக்கப்படமாட்டாது.

பிரதமர் பி. வி. நரசிம்மராவ் ஆந்திரா மாநிலம்—நந்தியால் அருகில் இடம்பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

எந்த வெளிநாட்டுச் சக்தியின் ஊடுருவலையும் முறியடிக்கும் திறமை இந்திய ஆயுதப்படையினருக்கு உண்டு என்றும் அவர் தெரிவித்தார்.

மூன்று நாள் விஜயம் ஒன்றை திரு. நரசிம்மராவ் தற்சமயம் ஆந்திர மாநிலத்தில் மேற்கொண்டுள்ளார். (ஒ-எ)

## அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு: இன விகிதாசாரம் இனி கவனிக்கப்படமாட்டாதாம்!

கொழும்பு, ஜன, 8

அரசாங்க சேவைக்கு ஆட்களை சேர்த்துக் கொள்ளும் போதும், அதில் பதவி உயர்வுகளை வழங்கும் போதும் எதிர்காலத்தில் இன விகிதாசாரம் கருத்தில் கொள்ளப்படமாட்டாது. திறமையும், சேவை மூப்புமே இனி கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

அரச திட்டமிடல் மாகாண சபை, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் அமுல் செய்யப்பட்ட முறையால் தகுதியும், திறமையும் உடைய பலர் பாதிக்கப்பட்டதாகவும்—

இனவிகிதாசார அடிப்படையில், கூடுதல் புள்ளி பெற்று பதவி உயர்வு கிடைக்காது போனவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படும் எனவும்— மேற்படி அமைச்சு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-3)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன 8

இலங்கை கணக்காளர் சேவைச் சங்க யாழ். கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ''பகிரங்க சேவையில் ஊக்குவித்தலும் தலைமைத்துவமும்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று இன்று முற்பகல் 9-15மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக வணிகத் துறை விரிவுரையாளர் திரு. ந. தேவராஜன் ஜெயராமன் தலைமையில் கருத்தரங்கு இடம்பெறும். (த-5)

## கடந்த வருடத்தில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் ஒரு லட்சம் பேர் சிகிச்சை

தென்மராட்சி, ஜன 8

கடந்த ஆண்டில் (1993) சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் ஒரு லட்சத்து ஆறாயிரத்து 659 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். மேலும் ஆறாயிரத்து 933 பேர் வார்ட்டுகளில் தங்கி சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவற்றைவிட சலரோகம், பொது மருத்துவம், மனநோய், குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார் ஆகியோருக்கான கிளினிக்குகளில் ஏராளமானோர் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர்.

கடந்த வருடத்தில் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட எண்ணாயிரத்து 47 பேர் அங்கு சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில் ஆயிரத்து 903 பேர் மலேரியாவினாலும் அறுபது பேர் மூளைக் காய்ச்சலினாலும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் கடந்த மாதம் ஆயிரத்து 676 பேர் காய்ச்சலினாலும், 508 பேர் மலேரியாவினாலும், நான்கு பேர் மூளை மலேரியாவினாலும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தென்மராட்சிப் பகுதியில் மலேரியாக் காய்ச்சலினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அண்மைக் காலத்தில் அதிகரித்து வருகிறது. (ஒ-117)

## யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களுக்கு உதவி

### உயர்கல்வி அமைச்சர் அநுரா

கொழும்பு, ஜன. 8

'யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக் கழகங்களில் மிகவும் கஷ்டமான நிலைமையில் கல்வி போதனை நடைபெறுகிறது. இக் கஷ்டங்களைச் சமாளிக்க விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை மறுப்பதற்கில்லை இரண்டு பல்கலைக்கழகங்களிலும் கல்விப் போதனையை முன்னேற்றுவதற்குத் தேவையான உதவி அனைத்தையும் செய்ய வேண்டும்.

புதிய உயர் கல்வி அமைச்சர் திரு. அநுரா பண்டாரநாயக்கா ''சண்டே ஒப்சேவர்''பத்திரிகைக்கு அளித்த செவ்வி ஒன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

இப் பல்கலைக் கழகங்கள் கல்வியில் காட்டும் ஈடுபாட்டை நாம் அனைவரும் வியந்து பாராட்டுகிறோம். [illegible] அளிக்கவேண்டும். இப்போ[illegible] மட்டக்களப்புக்கு நாம் செல்ல முடியும். அப்பகுதிக்குக் கூடுதலான உதவி வழங்குவதை இது இலகுவாக்கும்.

யாழ்ப்பாணத்துக்கும் மட்டக்களப்புக்கும் உதவி புரியும் வழிமுறைகளை நான் ஆராய்வேன்— என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

வடக்கின் புலிகளின் கல்வியைச் சீர்குலைப்பதில்லை யாழ்ப்பாணத்தில் 'ராக்கிங்' புலிகளால் அனுமதிக்கப்படவில்லை — என்றும் திரு. அநுரா பண்டாரநாயக்கா தமது பேட்டியில் கூறினார்.

மனிதத்தன்மையற்ற ராக்'கிங்' மாணவருக்கும் பெற்றோருக்கும் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கும் தீராத தலையிடியாக இருக்கிறது. ''ராக்கிங்'' நீங்கற்ற முறையில் நடைபெற வழிகாணப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். (எ)

## மலேரியாவை கட்டுப்படுத்த நடவடிக்கை: கப்பலில் மலத்தியோன் எடுத்து வருவதற்கு முயற்சி

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ் மாவட்டத்தில் தீவிரமாக பரவிவரும் மலேரியாவை கட்டுப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக மலத்தியோன் மருந்தைகப்பல் மூலம்கொண்டு வர முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உணவுப் பொருள்களுடன் மலத்தியோன் எடுத்து வர முடியாதுள்ளதால், மண்ணெண்ணெய் ஏற்றிவரும் கப்பலில் கொண்டுவருவதற்கு உதவுவதாக செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மலத்தியோனை கப்பலில் அனுப்ப முன்னுரிமை வழங்குமாறு புனர்வாழ்வு அமைச்சை யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். ([illegible])


# நாவலர் கல்விக் கழகம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

கல்வி ஆண்டு-1994

ஆண்டு 1 முதல் O/L வரை

ஆரம்பம்: 09 - 01 - 1994
ஞாயிறு காலை 7-30 மணி

திறமை வாய்ந்த ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையுடன்..

✲ விஞ்ஞானம்
T. S. S. மோகன்
T. S. குணாளன்
P. றெல்க்சன்

✲ கணிதம்
S. கிருபாகரன்
T. S. குணாளன்
செல்வி ரஞ்சி
செல்வி வேணி

✲ தமிழ்
புவனேந்திரன்
குழந்தைவேலு
செல்வி சிவரூபி

✲ சமூகக்கல்வி
K. S. முத்துலிங்கம்
செல்வி ரூபி

✲ ஆங்கிலம்
V. மண்டலேஸ்வரன்
K. சிவராஜா

✲ வர்த்தகம்
K. சத்தியபாலன்

✲ சமயம்
செல்வி ரூபி

★ மாதாந்த பரீட்சையுடன் வகுப்புகள் நடத்தப்படும்
★ புதிய அனுமதிகளை உடன் பெற்றுக்கொள்ளவும்
[சி-6926]



# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L SAT-SUN CLASSES (சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

ஆரம்பம்: 09 - 01 - 1994 (ஞாயிறு) காலை 8 மணி

திறமையால் பிரபல்யமான திறமை மிக்க யாழ். முன்னணி ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| 8— 9 | விஞ்ஞானம் | திரு. J. R. சுரி |
| 9—10 | கணிதம் | திரு. ஜெகன் |
| 10—11 | சமூகக்கல்வி | திரு. கோபி |
| 11—12 | ஆங்கிலம் | திரு. விஸ்வநாதன் |
| 12— 1 | தமிழ் | திரு. திருப்பதி |
| 1— 2 | சமயம் | திரு. சங்கர் |
| 2— 3 | வர்த்தகம் | திரு. கருணாகரன் |

★ தூர இட மாணவர்களின் நன்மை கருதி மேற்படி வகுப்பு ஆரம்பிக்கப்படுகிறது.
★ அனுமதிகளை முன் கூட்டியே பதிவு செய்யவும்.
[சி-6898]



# உதவித் தாதியர் பயிற்சி

DIPLOMA IN NURSING - AID

28 - 01 - 1994இல் ஆரம்பம்

★ 18 மாதகால பயிற்சி நெறி
★ தகைமை:- க. பொ. த. (சாதாரணம்)
★ உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு ஏற்புடையதான சான்றிதழ்
★ ''அக்குபங்சர்'' மருத்துவத்துறை இலவசமாக கற்பித்து சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு:- மாவீரர், போராளிகள் குடும்ப அங்கத்தவர்களுக்கு இலவச பயிற்சியும், இலவச தங்குமிட வசதியும் அளிக்கப்படும்.

விவரங்கள்:-

சாயி மருத்துவக் கல்லூரி,
இல 6 பருத்தித்துறை வீதி (1 ஆம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
(சி-6843)



# YARL HALL

கல்வி நிலையம்

93 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(திருமறைக் கலாமன்றம் முன்பாக)

BASIC ENGLISH COURSE

அனைவருக்குமான அடிப்படை ஆங்கிலக் கல்வி நெறி: இலக்கணம் / பேச்சு உட்பட பல அம்சங்களை உள்ளடக்கி மாணவர்களுக்கு தாம் சொந்தமாக ஆங்கிலம் எழுதவும் பேசவும் உதவும் இலக்குடன் கூடிய 6 மாத ஆங்கில கற்கை நெறி

ஆரம்பம்: 10 - 01 - 1994
திங்கள் 4-00 மணி

ஆசிரியர்: திரு. T சகாதேவன் B. A. (London)

✲ ஆண்டு 5 முதல் O/L வரை சகல பாடங்களும் நடைபெறுகின்றன.

விஞ்ஞானம் — இரா. செல்வவடிவேல்
சமூகக்கல்வி — ம. இக்னேசியஸ்
[6895]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஒரு வீணை, தம்புரா விற்பனைக்குண்டு. தொடர்பு: கோவிந்தபிள்ளை விஜயகுமார், 192/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (28800)

நல்ல இன பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு: கா. சஜந்தன், கோணாவளை ஒழுங்கை, கொக்குவில். (28830)

## விற்பனையாகின்றது

O M O S English Grammar, A/L Past Papers 1993 சேர்ந்தது, விஞ்ஞானம் 9-ஆம் ஆண்டு, ஆழ்கூற்று கேத்திர கணிதம், மீட்டல் கணிதம்- O/L ஆகியன விற்பனையாகின்றன. ஸ்ரீலங்கா புத்தகசாலை யாழ். (சி-7013)

## கோழிக்குஞ்சு விற்பனை

Hyline Brown (கைலைன் பிறவுண்) 11 நாள் பேட்டு குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகாபதி" சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (28796)

## மணப்பெண்கள் தேவை

செவ்வாய்க்குற்றமற்ற 29—32 வயதிற்கு இடைப்பட்ட எஞ்ஜினியர், டாக்டர், எக்கவுண்டனருக்கு டாக்டர், டென்ரல், எக்கவுண்டன்ற், Bio பட்டதாரி மணப்பெண்கள் தேவை. மங்கள ஏஜென்சி, தொய்யாத்தோட்டம். (28815)

## கல்வி

O/Lலில் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 27 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் ஆரம்ப அறிவிலிருந்து Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். Spoken English with Grammar உட்பட பாலர் வகுப்பிலிருந்து A/L வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (6896)

## உடன் தேவை

காரியாலய பணியாளர் (Office Peon) நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். புறோமோட்டேர்ஸ் எஞ்ஜினியரிங் கம்பனி (லிமிட்), 844, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (28822)

## இலவச திருமண சேவை

38 வயது U.K.இல் Accountant பணிபுரியும், பூராடம், செவ்வாய்க் குற்றமற்ற, கிரகபாவம் 22 மணமகனுக்கு 28 வயதிற்கு மேற்படாத A/Lக்கு மேல் படித்த மணப்பெண் தேவை. திருமணம் இங்கு செய்து அழைக்கலாம். விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி. (28835)

## திருத்திய பொருள்கள்

நியூ விக்ரேஸ் வாடிக்கையாளரின் கவனத்திற்கு 31-12-93க்கு முன் எம்மிடம் திருத்துவதற்கு ஒப்படைத்த பொருள்களை 31-1-94க்கு முன் பெற்றுக் கொள்ளவும். 31-1-94க்கு பின் அவற்றை மீளப் பெறமுடியாது என்பதை அன்புடன் தெரிவிக்கின்றோம். நியூ விக்ரேஸ் பி. எம். கி. ஒழுங்கை, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (28794)

## வெளிவந்துவிட்டது

முதுகவிஞர் அல்லை ஆறுமுகம் (ஈழமாஜினி) அவர்களின் "யக்கவாத்தியங்கள் இல்லாத பாட்டுக் கச்சேரி" (கவிதைத்தொகுதி) யாழ். நகரில் பத்திரிகை சஞ்சிகைகள் விற்கும் கடைகளில் பெற்றுக்கொள்ளலாம். விலை ரூபா 40 மட்டுமே. (28829)

## உலக உலா

தென்மராட்சி மக்களுக்கோர் நற்செய்தி. உங்களுக்குத் தேவையான உலக உலா சஞ்சிகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்: சோதி புத்தகசாலை, கச்சாய் வீதி, (மக்கள் கடை அருகில்) சாவகச்சேரி. (சி-6921)

## தேவை

யாழ். நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் மருந்தகத்துக்கு கணக்குப் பதிவாளர்/ கொள்வனவுப் பொறுப்பாளர்/ மருந்து விற்பனையாளர் தேவை. உங்கள் விண்ணப்பத்தை 11-01-1994க்கு பிந்தாமல் என். தனபாலசிங்கம், 51, மணிக்கூட்டு வீதி, யாழ் என்னும் முகவரிக்கு எழுத்து மூலம் அறிவிக்கவும். (28827)

தனிப்பட்ட ரியூசன் வழங்குவதற்கு தங்களால் இயன்ற பாடங்களை கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை. காலை 9-00 — 10-00, மாலை 2-00—3-00ற்குள் நேரடியாகச் சந்திக்கவும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (6897)

## இறைச்சிக் கோழிகள்

Broiler இறைச்சிக் கோழிகள் சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தை, நல்லூர், யாழ்ப்பாணம். (28838)

## வெளிவந்துவிட்டது

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் மீள் பார்வையுடன் கூடிய ஆண்டு 9 சைவநெறி வெளிவந்துவிட்டது ஆக்கம்: க. சந்திரசேகரம் வெளியீடு: சோதி புத்தகசாலை, கச்சாய் வீதி, (மக்கள் கடை அருகில்) சாவகச்சேரி. ஏக விநியோகஸ்தர்கள்; ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, இல. 235, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-6905)

---

ஜனவரி 9 ஞாயிறு (மாலை 3மணி)
புதிய பிரிவுகள் ஆரம்பம்

## O/L (ஆண்டு 11)

ஆண்டுகள் **10, 9**

★ உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி.
யாழ்ப்பாணம்.

[சி-6909]

---

# வேலை வாய்ப்பு

## TRAINEES PRODUCTION ASSISTANT

(பயிலுனர் உற்பத்தி உதவியாளர்)

மேற்படி வெற்றிடத்துக்கு பின்வரும் தகுதியுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் விண்ணப்பங்களை 17-01-1994 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

தகுதி:

வயது: ஆகக்கூடியது 30 - பெண்.
கல்வித்தகைமை: ஆகக்குறைந்தது க. பொ. த. (உ/த) சித்தி (தாவரவியல் அல்லது இரசாயனவியல் ஆகிய பாடங்கள் அடங்க வெண்டும்)
வேதனம்: அனுபவம் தகுதிகளுக்கு ஏற்ப வழங்கப்படும்

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-
நிர்வாக முகாமையாளர்,
**TASTE LINE INDUSTRIES (PVT) LTD.**
14, Seeiner Lane, Jaffna. (28798)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

## O/L DAY CLASSES

(8-00 — 2-00)

**ஆரம்பம்: 10 - 01 - 1994**

★ பாடசாலையிலிருந்து வெளியேறிய மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

[சி-7002]

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

## திருமதி புஷ்பவதி சோமாஸ்கந்தன்

சிறந்த சாயிபக்தையும் எமது மண்டலியின் நீண்டகால உறுப்பினருமாகிய திருமதி புஷ்பவதி சோமாஸ்கந்தன் அவர்கள் 8-12-1993 அன்று கொழும்பில் காலமானார். அவரது ஆத்மா பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் பாதாரவிந்தங்களை அடைந்து பூரண சாந்திபெற வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் எமது மண்டலியில் நடைபெறும்.

பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா மண்டலி
18/2, கச்சேரி கிழக்கு ஒழுங்கை
கண்டிக்குளி. (28831)

---

# காசாளர் தேவை

மொத்த, சில்லறை, தனியார் விற்பனை நிலையத்திற்கு அனுபவம் வாய்ந்த காசாளர் தேவை.

**14 — 01 — 94க்கு முன்னர் விண்ணப்பிக்குக.**

இல: 586,
C/o உதயன்.

(28819)

---

# கல்வியாண்டு - 1994

ஆண்டு 4 முதல் ஆண்டு 11 (O/L) வரை 1994 ஆம் ஆண்டிற்குரிய புதிய வகுப்புகள் 09 - 01 - 1994 காலை 9 00 மணி முதல் ஆரம்பமாகின்றன

ஆண்டு 5 ற்கான புலமைப் பரிசில் பரீட்சை வகுப்புகள் நடைபெறுகின்றன.

## FACULTY OF BRIGHT STUDIES

17/4, றெயில்வே வியூ.
சோமசுந்தரம் அவெனியூ,
சுண்டிக்குளி

[28832]

---

# 12 ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் சுப்பிரமணியம் சோமசுந்தரம்

(பொன்னையா)
(ஓய்வுபெற்ற ஆசிரியர், பரமேஸ்வராக் கல்லூரி)

மலர்வு: **02 — 08 — 1896**
உதிர்வு: **08 — 01 — 1982**

ஆண்டுகள் ஈராறு சென்றாலும்
ஆறுமோ எம் கவலை
நீரில் குமிழியென்னும்
நிலையற்ற வாழ்வை விட்டு
பேரின்பப் பெருவாழ்வு வாழச்
சென்றீர்களோ நீங்கள்
உங்கள் ஆத்மா சாந்திக்காகப்
பிரார்த்தித்து நிற்கும்;

மனைவி, மக்கள்

13/3, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டிக்குளி.

(28791)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08
02
1945

மறைவு
21
11
1992



## கனகு பாலசுப்பிரமணியம்

(காந்தன்)

செம்மை நிறத்தழகன் செல்வச் சிரிப்பழகன்
தம்பின் தனித்துவத்தைச் சாற்றானான் - நம்மவர்கள்
நெஞ்சில் நிறைகுடமாய் நிற்கும் நெறியாளன்
அஞ்சலிக்கண் அன்புளனே ஆம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்.


கச்சாய் றோட்,
கொடிகாமம் (28812)

---

கோபுரமாய் உயர்ந்த எங்கள் குலத்தலைவன் பாதமலரில்...
பாச நினைவுகளுடன்

# 31-ம் நாள் நெஞ்சகலா நினைவலைகள்

(08 - 01 - 1994)



## அமரர் கணபதிப்பிள்ளை இராஜகோபால்

(பங்காளர், கவிதாஸ் ஸ்ரோர்ஸ் - வவுனியா)
(வேலணை மேற்கு, வேலணை - 7)

ஆனந்த உதிப்பு: **09 - 12 - 1935**
ஆறாத்துயர் நினைப்பு: **10 - 12 - 1993**

குடும்பத்தின் ஒளிவிளக்கே!
அன்பான கணவனே, ஆருயிர்த் தந்தையே
என்னருமை மாமாவே, பாசமுள்ள மருமகனே
பதினைந்து வயதில் எனக்குக்
கைகொடுத்த மன்னவனே
நீக்கமற என் நெஞ்சில் நிலைபெற்ற தெய்வமே
30 ஆண்டுகளில் எனைப் பரிதவிக்கவிட்டு விட்டு
எங்கு ஐயா சென்றீர்கள்? என்னருமைத் தெய்வமே
தெய்வமே..... தெய்வமே..... என்னருமைத் தெய்வமே
வாழ்ந்தீர்கள் எமக்காக, வாழ்கிறீர்கள் எங்களிலே
நீங்கள் பெற்ற செல்வங்கள் எழுபேர் நாமிருக்க
எங்குதான் சென்றீர்கள் எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
அன்போடும் பாசத்தோடும் கல்வியறிவூட்டியெமை
கண்கலங்க விடாது வளர்த்தெடுத்த அப்பாவே
எங்களது எதிர்காலம் ஒளிவீசப் பாடுபட்டு
நேர்வழியைக் காட்டிவிட்டு மாயமாய் மறைந்தீர்களே
அப்பாவே..... அப்பாவே..... எம்மருமை அப்பாவே
வாசமது மாறாமல் எங்குமே நீங்கள் வாழ்வீர்கள்.

இன்று (08-01-94) அன்னாரது கொக்குவில் இல்லத்தில நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும், மதியபோசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டிநிற்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள், மருமகன், மாமி,

பிரேசன் றோட்,
கொக்குவில்

(28818)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 இலங்கை மீனவர்கள் கன்னியாகுமரியில் கைது!

சென்னை, ஜன. 8

கன்னியாகுமரியில் நான்கு இலங்கை மீனவர்களை தமிழ் நாடு பொலிஸார் கைது செய்தனர்.

இம்மாதம் 2 ஆம் திகதி மீன் பிடிக்க தாங்கள் இலங்கையில் இருந்து புறப்பட்டதாவும் —

கடற்கொந்தளிப்பு மற்றும் கடற்காற்று காரணமாக தங்களின் இயந்திரப்படகு கட்டுப்பாட்டை இழந்து விட்டதாகவும் அம்மீனவர்கள் தெரிவித்தனர்.

அவர்களின் படகு மற்றும் சில மீன்பிடி வலைகளையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர் என்று அறிவிக்கப்பட்டது. [உ–எ]


யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம் (ஆங்கிலம்)

## க. பொ. த .(உ/தர) வகுப்புகளுக்கான அனுமதி

1996 ஆம் ஆண்டுக்கான கணித, விஞ்ஞான, வர்த்தக, கலை வகுப்புகளுக்கு அனுமதி பெற விரும்புவோர், 12-01-94 புதன்கிழமைக்கு முன் விண்ணப்பங்களைப் பாடசாலை அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

- அதிபர்

(28844)


## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 18 – 09 – 1932



உதிர்வு: 08 – 01 – 1990

**MRS RITA PADAIWEERASINGHAM**

(இரத்தினம்)

அன்பின் உறைவிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய், எல்லோரினதும் நெஞ்சத்தில் - வாழ்ந்த நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஆண்டு நான்கு சென்றாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சை விட்டு நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், சகோதர, சகோதரிகள்,
உறவினர், நண்பர்கள்.

No 335/3, Modera Street,
Colombo – 15

துன்னாலை மேற்கு,
சாவகச்சேரி.

[6898]

## ஓராண்டு நினைவலைகள்



### சுப்பிரமணியம் நாங்கேசு

தோற்றம்: 14 07 19 4

மறைவு: 20 – 12 – 1992

1994 - 01 - 08

தந்தை என்ற சொல்லுக்கு இலக்கணம் - வகுத்தவரே
தனலம் பாராது தளர்வின்றி உழைத்தவரே
தனது உடன் தன்னம்பிக்கையும் சேர்ந்தளித்தவரே
தந்தை சொல் மிக்க மந்திரம்
இல்லையென்று தரணியிலே வாழவைத்தவரே
நீங்கள் மறைந்தாலும் மறையவில்லை நினைவுகள்
நினைப்போம் நிறைவேற்றுவோம்
நின்பணிகளை தொடர்ந்தே.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல முத்துமாரி அம்மனை இறைஞ்சுகிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

(28841)

## விளையாட்டு நிகழ்வு

அமரர் ஜி. கே. செபஸ்ரியாம்பிள்ளை ஞாபகார்த்தமாக பாஷையூர் சென். அன்ரனீஸ் மக்கள் முன்னேற்றச் சங்க சனசமூக நிலையம் ஒழுங்கு செய்துள்ள காட்சி உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு பாஷையூர் சென் அன்ரூஸ் மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் நிக்கிலஸ் வி. க. அணியை எதிர்த்து சென். அன்ரனீஸ் வி. க. அணி மோதும். (உ–17)

# இன்று நடப்பவை

யெகோவா சாட்சிகளின் வட்டார மாநாடு இன்றும் நாளையும் சாவகச்சேரி பேரம்பலம் வீதி, பெரியமாவடியில் உள்ள இராட்சிய மண்டபத்தில் நடைபெறும். நிகழ்ச்சிகள் காலை 9.55 மணிக்கு ஆரம்பமாகும்.

★ ★ ★

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடத்தி வரும் வதிவிட வேளாண்மை தொடர்பான கலந்துரையாடல் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாணம் ஓட்டுமடம் மாவீரர் சனசமூக நிலையத்தில் கலந்துரையாடல் நடைபெறும்.

★ ★ ★

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் இன்று முதல் நல்லூர் ப.நோ.கூ.ச. கிளைகள் மூலம் வழங்கப்பட உள்ளன. (இ–77)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 8

அரச கணக்காளர் சேவை ஆட்சேர்ப்புப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் இலங்கை கணக்காளர் சேவை சங்க யாழ் கிளையால் இன்றும் நாளையும் நாவலர் கலாசார மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இன்று பிற்பகலிலும், நாளை முழுநேரமும் வகுப்புகள் நடைபெறும். (த–5)

## மாணவர் கலந்துரையாடல்

வடமாகாண இணைக்கப்பட்ட பல்கலைக்கல்லூரி மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிறு காலை 9.30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் யாழ்ப்பாணம் 'எழிலகம்' முன்பாக உள்ள புதிய விஞ்ஞான கல்விக் கழகத்தில் நடைபெறும்.

இந்த இரு கலந்துரையாடல்களிலும் சம்பந்தப்பட்ட சகல மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு கோரி உள்ளது. (இ)


**BOND INSTITUTES**

யாழ்ப்பாணம்.

★ ஆண்டு 4 முதல் O/L வரை ஒவ்வொரு வகுப்பிலும் 35 மாணவர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

(எமது வழமையான ஆசிரியர் குழு)

★ மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளுடன்

புதிய வகுப்புக்கள்

ஆரம்பம்

**09-01-1994**

(ஞாயிறு)

(28849)


## கம்புத்தானிய உற்பத்தி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் 1990 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட அதிக விளைச்சலைத் தரக்கூடிய கம்புத்தானியத்தை விவசாயிகள் மத்தியில் பரவலடையச் செய்யும் நோக்கில் பல்வேறு செயற்திட்டங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிராமிய உற்பத்திக் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் பிரகாரம் வலிகாமம் கோட்டத்தில் வட்டம் ஒன்றுக்கு கால் ஏக்கரில் பயிரிடக் கூடிய கம்புத்தானியம் கிராமிய உற்பத்திக் குழுக்களின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது. (ஒ)

## திருவாசக முற்றோதல்

குடாநாட்டில் உள்ள பல ஆலயங்களிலும், சைவமன்றங்களிலும் நேற்று திருவாசக முற்றோதல் ஆரம்பமாகியது.

மார்கழி மாதத்துக் கடைசி வாரமான இந்தக் கிழமையில்—எதிர்வரும் வியாழக்கிழமை வரை-திருவாசக முற்றோதல் தொடர்ந்து நடைபெறும். (அ–28)

சாவகச்சேரி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற புக்காரா விமானத் தாக்குதலின்போது காயமடைந்து, வியாழக்கிழமை மரணமான சிவநெறிச் செம்மல் ச. நமசிவாயத்துக்கு அஞ்சலி செலுத்து முகமாகவே கடைகள் மூடப்பட்டிருந்தன.

காலஞ்சென்ற நமசிவாயம் சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்கத்தின் தலைவராகவும், சிறந்த சமூக சமய சேவையாளராகவும் விளங்கினார். இவர் ஒரு சமயச் சொற்பொழிவாளருமாவார். (அ–51-117)

குமணவுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

தமது தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வசதிகள் கொண்ட கப்பலை இலங்கையில் பெறமுடியாதுள்ளதாகவும் —

அதனால் சிங்கப்பூர், மலேசியா, இந்தியா போன்ற நாடுகளில் ஏதாவது ஒன்றில் இருந்து கப்பல் ஒன்றைப் பெற முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாகவும் — அவர் மேலும் தெரிவித்தார். [உ–3]

எலும்புக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் அங்கு செல்வதற்கு பொலிஸார் தடை விதித்திருக்கின்றனர்.

எனினும் இன்று காலை 8.30 மணிக்கு மீண்டும் புதைகுழியைத் தோண்டும் நடவடிக்கைகள் எம்பிலிப்பிட்டிய நீதிவான் முன்னிலையில் ஆரம்பமாகும் போது—

காணாமற் போனவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், மனித உரிமைகள் நிறுவனங்களின் பிரதிநிதிகள், மருத்துவ மற்றும் சட்ட மாணவர்கள் ஆகியோரும் பொதுமக்களும் அங்கு அனுமதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

சூரியகந்தவில் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டு வருவது பற்றிய செய்திகளால் அரசுக்கு தெற்கில் செல்வாக்கு சரிந்து வருகின்றது என்றும்—

உடன் நடத்த உத்தேசிக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தலை அதனால் அரசு ஒத்திவைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும்—ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே. (உ–3-6)


## புத்தாண்டில்... புத்தம் புது நிகழ்ச்சி

யாழ், ரமணனின்

ராஜன்ஸ் இசையில்

சாந்தன்

முதன் முறையாக இணைந்து பாட

ராஜன்ஸ் படைக்கும்

# இன்னிசைப் பொங்கல்

S. G. சாந்தனுடன், ஜெயா சுகுமார், பார்வதி சிவபாதம், வர்ணராமேஸ்வரன், S. திவாகர், S. சத்தியசீலன், ஸ்ரனி சிவானந்தன், திருமலை சந்திரன், ஈழத்து மனோ நாவலன் ஆகியோரின் —

❊ இசைச்சுவை ❊

"சிற்றி போய்ஸ் டெய்லர்ஸ் ஆதரவில்"
தங்கவேல் செல்வராஜா குழுவினரின்

"சிரியுங்கள் சிந்தியுங்கள்"

★ நகைச்சுவை ★

மாஸ்டர் கஜேந்திரனின் ஓர்கன் இசை

இடம்: வேம்படி மகளிர் கல்லூரி
காலம்: 14 – 01 – 1994
நேரம்: பி. ப. 2-30, மாலை 7மணி
டிக்கெற்: 100/- 50/-
கிடைக்கும் இடம்: மணிக்குரல் விளம்பர சேவை

★ வாழ்த்துகிறோம்
★ முகூர்த்தப்பட்டு புடைவைகளின் சோலை ★

லலிதா புடவை மாளிகை

இல. 5-6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(28759)



பருத்தித்துறை
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

## பதவி வெற்றிடம்

லொறிச்சாரதி - 312/11 (நிரந்தரம்)

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களைச் சங்கக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இப்பதவிக்கு வயதெல்லை 18 முதல் 40 வயது வரையாகும். மேலும் கல்வித் தகைமைகள், வேதனம் பற்றிய விவரங்களை சங்கத் தலைமை அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய உங்கள் விண்ணப்பங்களை கல்விச் சான்றிதழ், நற்சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளுடன் "தலைவர், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை" என்ற முகவரிக்கு 1994-01-22 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவும். நீங்கள் அனுப்பும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'லொறிச் சாரதி பதவிக்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

— பொதுமுகாமையாளர்.

1994-01-06.

(சி–6935)


## நீங்கா நினைவுகளில் ஒளிரும் அணைந்து போன அறிவு மின்னல்

### அமரர் தேசிங்குராஜா யோகராஜா

(கணக்கியல் ஆசிரியர்)

தோற்றம்: 25 – 12 – 1961

மறைவு: 08 – 01 – 1993

காலம் கடந்து சென்ற வாழ்வுகள் கணக்கில்லை - ஆனால்
காலத்தையே கடந்து சென்றது உந்தன் வாழ்வு
மனிதர்களை மரங்களாக மாற்றாது
மரங்களையே மனிதமாக்கும் மகத்துவம் படைத்தோன் நீ
வெண்பாவில் வைத்துன் விரிபுகழைச் - சொல்லுவதற்குள்
கண்பாவெழு நீர் கரைமீறும் - கண்ணாளா
ஓங்கும் உலகில் உயிரால் அழிந்தாலும்
நீங்கா தெமை நின் நினைவு.

[28823]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாக்கியம் இராசு

மல்லாகம் சாளம்பை முருகன் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பாக்கியம் இராசு நேற்று வெள்ளிக்கிழமை (7 - 01 - 1994) அதிகாலை சிவபதம் அடைந்தார்.

அன்னார் அரசாங்க கட்டட ஒப்பந்தகாரர் திரு. ஆறுமுகம் இராசு அவர்களின் அன்பு மனைவியும், தங்கப்பிரகாசம் (யாழ். கல்வித் திணைக்களம்), மகாதேவன், வாமதேவன் (பனம்பொருள் கூட்டுத்தாபனம்), சகாதேவன், வரதன் (சுவிஸ்), கோடீஸ்வரன் (யாழ். தொழில்நுட்பக் கல்லூரி), மனோன்மணி, சிவா, லோகநாயகி (நெதர்லாந்து), அரியமலர் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுந்தரலிங்கம், ஜெயக்கொடி, வசந்தாதேவி, ஜானகி, கலாதேவி, சுகிர்தா (சுவிஸ்), கருணேந்திரன் (நெதர்லாந்து), சத்தியநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், திருமதி பரமேஸ்வரி - இராமையாவின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுப் பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. இராசு

சுன்னாகம்.

(28847)

## ஞானசப்பிள்ளை இராயப்பு

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்ட (முன்னாள் C. W. E காசாளர்) ஞானசப்பிள்ளை இராயப்பு நேற்று காலமாகிவிட்டார்.

அன்னார் மேரிசிசிலியா இராயப்பு (நேசம் ரீச்சர், இளைப்பாறிய ஆசிரியை, சில்லாலை றோ. க. பா.) அவர்களின் அன்புக் கணவரும், திருமதி மரியவில்ம றஜனி றஞ்சன் (ஜேர்மனி), யூட்றொனாட் (லண்டன்), செல்வி ஆன்யூலியற் ரதினி (ஆசிரியை, புனித கென்றியரசர் கல்லூரி, இளவாலை), செல்வி பெலிசிற்றா ரமணி (கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், றஞ்சன் (ஜேர்மனி) ஆன்லோஜினி (லண்டன்) ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இரங்கற் திருப்பலி இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக சில்லாலை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நேசம் ரீச்சர்
(மனைவி)

Dr: H. P. செல்லையா,
''றொஸ் வில்லா''
கனகசபை லேன்,
மானிப்பாய்.

(28848)

## ஆறுமுகம் வேலுப்பிள்ளை

(வேலுப்பிள்ளை மாஸ்ரர்)

மாவிட்டபுரம் பளையைச் சேர்ந்த ''அன்பகம்'' அளவெட்டி தெற்கு தம்பளையில் வசித்த திரு. க. ஆ. வேலுப்பிள்ளை இளைப்பாறிய ஆசிரியர் (அருணோதயாக் கல்லூரி, மாகோ மத்திய மகாவித்தியாலயம்) 9-12-93 வியாழன் வத்தளையில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஆறுமுகம் - கைலாயம் தம்பதிகளின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்ற சிற்றம்பலம் அன்னம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அருமைக் கணவரும், திருமதி இராஜேஸ்வரி தியாகராசாவின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற ஆறுமுகம் தியாகராசாவின் அருமை மாமனாரும், தி. பிரபாகர், தி. உமாசுதன், தி. சயந்தன் ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை, கணபதிப்பிள்ளை, திருமதிகள் செல்லம்மா, அன்னபூரணி, முருகுப்பிள்ளை, திருமதி சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற வை. ஆறுமுகம், த. விசுவலிங்கம், காலஞ்சென்ற த. தமோதரம்பிள்ளை, காலஞ்சென்றவர்களான செல்வி சி. செல்லம்மா, திருமதி பொ. இரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆ. தருமலிங்கம், காலஞ்சென்ற ஆ. தியாகராசா, வி. செல்வரத்தினம், பொ. திலகவதி, பா. உருக்குமணி, வி. பூபாலகிருஷ்ணன், தா. யோகசுந்தரம், பா. சீதாலக்ஷ்மி, தா. சிவபாதசுந்தரம், தா. சிவஞானசுந்தரம், தா. மோகனசுந்தரம், யோ. லோகநாயகி ஆகியோரின் தாய் மாமனும், Dr. பொ. குகதாசன், பொ. சிவதாசன், ஆகியோரின் பெரிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஐயரட்ணபாளரில் நடைபெற்று பூதவுடல் கனத்தை இந்துமயானத்தில் 11-12-93 அன்று தகனம் செய்யப்பட்டது. உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் இதனை அறியத்தருகிறோம்.

அன்னாரது அந்தியேட்டி முகத்துவாரத்திலும், வீட்டுக்கிரியை வத்தளையிலும் நடைபெறும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல மாவை முருகனை பிரார்த்திக்கும்;

குடும்பத்தினர் (மகள், பேரப்பிள்ளைகள்)

தகவல்:
திருமதி தியாகராசா இராஜேஸ்வரி

97/2, தெலுங்கு பாத வீதி,
வத்தளை,
கொழும்பு.

(28802)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 08 01 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.